**தலைப்பு 160 – மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 160 – மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 14 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 35,886.83 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றுள் ரூபா 28,720.47 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 7,166.36 மில்லியன் அதாவது 19.97 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 3,534.73 | 3,516.46 | 18.27 | 0.52 |
| மூலதனம் | 32,352.10 | 25,204.01 | 7,148.09 | 22.09 |
| மொத்தம் | 35,886.83 | 28,720.47 | 7,166.36 | 19.97 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 16001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 9.30 | 7.65 | 5.80 | 10.42 | 45.00 | 30.82 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழான 02 கட்டுநிதிக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 307.57 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7002/0000/00/0323/0015/000 | 234.05 |
| 7003/0000/00/0091/0015/000 | 73.52 |
| மொத்தம் | 307.57 |

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 60.37 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0015/0070/000 | 6.51 |
| 6000/0000/00/0013/0074/000 | 0.65 |

| | |
|---|---|
| 6000/0000/00/0018/0061/000 | 52.98 |
| 6000/0000/00/0016/0061/000 | 0.23 |
| | ------------- |
| **மொத்தம்** | **60.37** |
| | ======= |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 5,615,629 ஆகும்.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,059.95 மில்லியன் மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 40 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) 05 செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பெறப்பட்டிருந்த ரூபா 18.62 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமல் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தன.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

2 வருடங்களை விஞ்சிய ரூபா 6.66 மில்லியன் கூட்டுத்தொகையான 21 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 307.7 மில்லியன் நிதிஏற்பாடு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று விரிவாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சிற்குச் சொந்தமான 04 மோட்டார் வாகனங்களை 02 வருடகாலமாக விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும்,

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைவான காலமாக கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 8.53 மில்லியன் ஆகும்.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 6.35 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள், பொறுப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 284,491 தொகை 2015 ஆம் ஆண்டின் பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தது.

(iv) 2015 ஆம் ஆண்டிற்குரிய 13 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 5.55 மில்லியன் கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை** | | |
| (i) 2010 யூலை 09 ஆந் திகதிய சீஏ/1/1/16/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | வெளிநாட்டு சுற்றுலாவின் பின்னர் நாட்டிற்கு வருகைதந்து 07 நாட்களுக்குள் அது தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) 2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ01/40 ஆம் இலக்க சுற்றறிக்கை | 1,216,102 | 03 செயலமர்வுகளை நடாத்துவதற்காக 03 ஹோட்டல்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| **(ஆ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| 2015 யூன் 26 ஆந் திகதிய 18/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 96,000 | ஒவ்வொரு சேவைகளினதும் விஷேட தொழிற்தகைமைக் கொடுப்பனவுகள் மற்றும் பொறியியலாளர் படிகள் போன்ற இரண்டு படிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |
| **(இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை** | | |
| (i) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் (i) ஆம் பிரிவு | 62,475 | 03 செயலமர்வுகளுக்கு மூன்று உத்தியோகத்தர்களுக்காக அமையப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 03/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06(viii) ஆம் உப பந்தி | 50,999 | உத்தியோகத்தரொருவருக்கு அரசாங்கத்தின் செலவில் கையடக்கச் தொலைபேசியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) 2015 மே 15 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3(அ) உப பந்தி | 157,819 | வெளிநாட்டுக் கற்கை, பயிற்சி கலந்துரையாடல், மாநாடுகளுக்காகப் பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற அமையப் படிகள், 02 செயலமர்வுகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஈ) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை** | | |
| 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2.1 ஆம் பந்தி | 406,008 | செயற்திட்டத்திற்காக பதவியணியினரை நியமிக்கும் போது ஆரம்ப சம்பளப்படி நிலையில் வைக்காது கூடுதலாகச் சம்பளம் செலுத்தப்பட்டமையினால் மிகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 3.8 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் 20 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டங்களின் பிரகாரம் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயங்களின் கூட்டுத்தொகை ரூபா 24,697.91 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 17,986.37 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டுதவி செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்திட்டத்தின் செயலாற்றல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உயிரியல் பல்வகைப்படுத்தலுக்கான ஒன்றியத்தை அமுல்படுத்துவதற்கான தேசிய உயிரியல் பல்வகைப்படுத்தல் உபாய வழிகளை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தயாரிப்பதற்கான செயற்திட்டம் 2015 யூலை 31 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 யூன் மாதம் வரையிலும் செயற்திட்டக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

(ii) நீண்ட காலமாக காணப்படுகின்ற சேதன மாசுக் கூறுகள் தொடர்பான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டத்தை நாளதுவரையாக்கும் செயற்திட்டம் 2015 யூலை மாத இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் மாதம் வரை அது நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 மே மாதம் இறுதி வரையிலும் நாளது வரையாக்குவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வளத்திட்ட செயற்திட்டத்தின் காலம் 2015 ஆம் ஆண்டின் போது முடிவடைந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்ற வேண்டிய மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,179 மில்லியன் பெறுமதியான பின்வரும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமலே மேலதிக நிதியீட்டம் செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

- றன்தெனிகல, றன்டெம்பே, தம்புளுஓய மற்றும் கந்தலம அணைக்கட்டு கதவுகளில் நிறப்பூச்சினை மாற்றுதல்.
- தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் காட்சிகளுக்கான முறைமையொன்றை தயாரித்தல் (SCADA)
- விக்டோரியா அணைக்கட்டு மற்றும் பொல்கொல்ல சுரங்கத்தின் மீளமைப்பு வேலையினை மேற்கொள்ளல்.
- பூமியதிர்ச்சி தீர்மானித்தல் மற்றும் முன்அபாய அறிவிப்பு முறைமையைத் (Earthquake Monitoring and Early warning System) தயாரித்தல்.
- வான்கதவு பரீட்சிக்கும் உபகரணங்களைக் (Sluice Barrel Inspection Instrument) கொள்வனவு செய்தல்.

(iv) 2015 யூன் வரையில் செயற்திட்டக் காலம் இரண்டு வருடங்களினால் நீடிக்கப்பட்டிருந்த போதிலும், மீள் செயற்பாட்டு வேலை நிறைவேற்றப்பட்ட 32 அணைக்கட்டுக்களில் 27 அணைக்கட்டுகள் 2 மாதம் முதல் 29 மாதம் வரையிலான தாமதத்தின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்ததைப் பூர்த்திசெய்யும் போது கிரயமாற்ற சதவீதம் (22) முதல் +44 சதவீதம் வரை மாற்றமடைந்திருந்தமையால் ஒப்பந்த பலவீனமான நிர்வாகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2015 யூன் 30 ஆந் திகதி வரையில் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 15 அணைக்கட்டுக்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு சகல கொடுப்பனவுகளும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அணைக்கட்டுகளுக்காக மேலும் பிடிகாசு மற்றும் இறுதிக் கொடுப்பனவுகள் செலுத்த வேண்டியுள்ளமையால் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் நம்பிக்கைத் தன்மை சந்தேகத்திற்குரியதாக இருந்தது.

(v) செயற்திட்ட நிதி உடன்படிக்கையின் 1(ஓ) பகுதியின் பட்டோலை I இன் பிரகாரம் சேனாநாயக்க சமுத்திரம், சமனலவெவ மற்றும் விக்டோரியா அணைகளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக விஷேட ஆய்வொன்று மேற்கொண்டு மீளமைப்பு வழிமுறைகள் தொடர்பான முன்மொழிவுகளை சிபாரிசு செய்வதற்காக ரூபா 52.47 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கையில் இந்த விஷேட ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) இந்த செயற்திட்டத்தின் கீழ் அணைக்கட்டு மீளமைப்பு வேலைகளுக்கான ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக ரூபா 518.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 14 அணைக்கட்டுக்களின் பிழையான மீளமைப்பு வேலைகளை சரிசெய்வதற்காக ரூபா 812.51 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் மீண்டும் கையளிக்கப்பட்டமையால் ஆலோசனைப் பணிகளை வழங்குதல் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டதா என்பது சந்தேகத்திற்குரியதாக இருந்தது.

(vii) செயற்திட்டத்தின் கீழ் நீர் வளிமண்டலவியல் தகவல் முறைமையை நிர்மாணிப்பதற்கு 122 அளவைகளை எடுக்கும் நிலையங்களை தாபிப்பதற்காக ரூபா 628.94 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 813.57 மில்லியன் செலவில் 70 நிலையங்கள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட தொகையினை விட கூடுதலாக ரூபா 184.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 52 இடங்களின் வேலை பூர்த்திசெய்யப்படாதிருந்தமையினால் அந்தப் பணிகள் மேலதிக நிதிசார் செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(viii) பல் துறை நீர் வள முகாமைத்துவத்தின் கீழ் தேசிய நீர் பயன்பாட்டுத் திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட மஹாவலி நீர்வளத் திட்டம் மற்றும் முன்தெனி ஆறு கங்காதோனித் திட்டம் என்ற திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 742.75 மில்லியனில் ரூபா 526.25 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 492.08 மில்லியன் தொகையான திட்டத்தைத் தயாரிக்கும் மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமாக அமுல்படுத்துவதற்காக கொள்கை ரீதியான விடுவிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் 2015 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பெறப்பட வேண்டியிருந்தமை 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 06 ஆந் திகதி வைர நடாத்தப்பட்ட உலக வங்கி கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ix) மின்சார சபைக்குச் சொந்தமான காசல்ரீ நீர்த்தேக்கத்தின் சிவில் வேலைகள் மற்றும் மின்சார கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக ரூபா 99.08 மில்லியன் பெறுமதியான 02 ஒப்பந்தங்கள் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டிய இந்த பணிகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் கீழ் அணைக்கட்டுக்களில் நீர் வழிந்தோடும் நிலைக்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான உபகரணங்களை உரிய முறையில் பொருத்துவதற்கு ஒப்பந்தக்காரர் தவறியமையினால் மின்சார சபையும் செயற்திட்ட முகாமைப் பிரிவும் இணைந்து வேறொரு ஒப்பந்தமாக பூர்த்தி செய்வதற்கும் அதன் கிரயங்களை மேலதிக நிதிச் செயற்திட்டத்தின் செலவினத்தின் கீழ் காண்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(x) செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் 01 (ஐ) பந்தியின் பிரகாரம் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய அணைக்கட்டு பாதுகாத்தல் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டக் காலம் 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அதற்குரிய பணிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(xi) இந்த செயற்திட்டத்தின் ஒரு செயற்பாடான அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் செயற்திறனான முன்னேற்றத்தின் கீழ் 80 அணைக்கட்டு மீளமைப்பு மற்றும் அடிப்படை பாதுகாப்பு வசதிகள் தயாரிக்கும் போது தெரிவு செய்யப்பட்ட 15 அணைக்கட்டுக்களுக்காக உரிய 15 அவசர செயல் நடவடிக்கைத் திட்டங்களைத் (Emergency action plan) தயாரிக்க வேண்டிய போதிலும், 08 அணைக்கட்டுகள் மாத்திரம் அவசர செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு ஆலோசனைக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டமையினால் 2015 யூன் 30 ஆந் திகதி வரையில் 08 அணைக்கட்டுக்களில் மாத்திரம் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(xii) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளத்திட்டத்தின் மேலதிக நிதிசார் செயற்திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய மீளமைப்பு வேலைகள் இனங்காணப்பட்ட 14 அணைக்கட்டுக்களின் வேலைகளுக்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 80 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது, 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் எந்த அணைக்கட்டுக்களிலும் வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு அணைக்கட்டு மீளமைப்பு வேலைகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மகாவலி அதிகாரசபைக்குரிய மீளமைப்பு வேலைகள் இனங்காணப்பட்ட 10 அணைக்கட்டுக்களுக்காக ரூபா 635 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலுமும், அதில் 02 அணைக்கட்டுக்களின் மீளமைப்பு வேலைகள் அகற்றப்பட்டிருந்ததுடன் 04 அணைக்கட்டுகளின் மீளமைப்பு வேலைகளுக்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மின்சாரசபைக்குரிய ஒரு அணைக்கட்டின் மீளமைப்பு வேலைக்காக ரூபா 05 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டத்தின் தொகுதி இலக்கம் 03 இன் கீழ் ஆரம்ப செயற்திட்டத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டு வரையில் ரூபா 506.13 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த 03 நீர் பயன்படுத்தல் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக கொள்கைரீதியான தீர்மானமொன்றை எடுப்பதற்கான ‘‘வரைவு அமைச்சரவை விஞ்ஞாபனம்’’ அரசாங்கத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமையினால் அந்த 03 திட்டங்களையும் அமுல்படுத்துவற்குத் தேவையான ‘‘ஆரம்ப சாத்தியவள ஆய்வை’’ ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

இந்த செயற்பாடுகள் மேலதிக நிதியளிப்பு செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், மேலதிக நிதியீட்ட செயற்திட்டம் 2014 செப்தெம்பர் மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆரம்ப சாத்தியவள ஆய்விற்காக 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 13 மில்லியன் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளிநாட்டுதவி செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சில கைத்தொழில்கள் கைவிடப்பட்டமை**

---

**(i) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளத்திட்ட செயற்திட்டம்**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- திஸ்ஸவெவ, நாச்சியாதீவுவெவ, நுவரவெவ போன்றவற்றின் அணைக்கட்டு மீளமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 475.7 மில்லியன் தொகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 278.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர்கள் குறிப்பிட்ட திகதியில் வேலைகளைப் பூர்த்தி செய்யாமை மற்றும் அங்கீகாரமின்றி உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த செயற்பாடுகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்தங்களின் எஞ்சிய வேலைகளை நிறைவேற்றுவதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

- செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் 01(என்) பந்தியின் பிரகாரம் செயற்திட்டத்தினால் பொல்கொல்ல சுரங்க மற்றும் லக்ஷபான புதிய சுரங்கம் என்பவற்றிற்காக மீளமைப்பு பணிகளை இனங்காண்பதற்கு ஆராய்ச்சியொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்ததுடன், பொல்கொல்ல சுரங்கத்தில் மீளமைப்பு செயற்பாடுகளை எடுப்பதற்குத் தேவையான ஆராய்ச்சி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. சர்வதேச நியமத் தேவைகளின் பிரகாரம் சுரங்க பரிசோதனை 20 வருடங்கள் முதல் 30 வருடங்களுக்கிடையிலான கால வீச்சில் செய்யப்பட வேண்டிய போதிலும், 28 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பொல்கொல்ல சுரங்கத்தின் பரீட்சிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது நடைபெற்ற உலக வங்கி செயற்திட்ட மீளாய்வுக் கூட்டத்தின் போது இந்த விடயங்கள் தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டிருந்தது. 2014 யூலை 22 ஆந் திகதி மற்றும் யூலை 23 ஆந் திகதிகளில் நடைபெற்ற மீளாய்வுக் குழுக்கூட்டத்தின் பிரகாரம் இந்த பொல்கொல்ல சுரங்க ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மூடப்படுமாயின் வறட்சியான காலநிலையின் கீழ் பொதுமக்களுக்கு மேலும் வசதியீனங்கள் ஏற்படுகின்றமையினால் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளாதிருக்குமாறு நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு ஆலோசனை வழங்கியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது.

  2015 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 07 ஆந் திகதி வரை நடைபெற்ற உலக வங்கி செயற்திட்ட மீளாய்வுக் கூட்டத்தின் போது இந்த சுரங்கம் தொடர்பாக மீண்டும் கலந்துரையாடாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் வறட்சியான காலநிலையின் கீழ் இந்த பணிகள் கைவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு எதிர்கால திட்டமொன்றேனும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. சுரங்கம் மூடப்பட்டமையினால் ஏற்படுகின்ற வசதியீனத்தைவிட இந்த மீளமைப்பு வேலைகளை நிறைவேற்றாமையினால் ஏற்படுகின்ற நட்ட இழப்பு பாரியளவாக இருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**(ii) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டத்தின் மேலதிக நிதிசார் செயற்திட்டம்**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளத்திட்டத்தின் மேலதிக, நிதியீட்ட செயற்திட்டத்திற்கு நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட கிரயப் பத்திரத்தின் பிரகாரம் ''பொல்கொல்ல சுரங்கத்தின் மீளமைப்பு வேலைகளை இனங்காண்பதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேலதிக நிதியீட்ட செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு நிதிஏற்பாடு கோரப்பட்டிருந்தது. இருந்த போதிலும், ஆரம்ப செயற்திட்டத்தின் மூலமும் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்த இந்தச் பணிகள் 2016 ஆம் ஆண்டளவில் முழுமையாக மேலதிக நிதியீட்டத்தின் மூலமும் கைவிடப்பட்டிருந்தது. சர்வதேச நியமத் தேவைகளின் பிரகாரம் சுரங்க பரிசோதனை 20 வருடங்கள் முதல் 30 வருடங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 28 வருடங்கள் கடந்திருந்த போதிலும், உரிய பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வறட்சியான காலநிலையின் போது இந்த சுரங்கம் மூடப்பட்டமையினால் மக்களுக்கு மேலதிக வசதியீனங்கள் ஏற்படுகின்றமையால் இந்த செயற்பாடுகள் 2014 ஆம் ஆண்டின் போது கைவிடப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர் 2016 ஏப்ரல் மாதம் வரையில் உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் தொடர்பான செயற்திட்டம் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த சுரங்க மீளமைப்பிற்கான மாற்று முன்மொழிவுகளை கவனத்திற் கொண்டு செயற்திட்டக் காலத்தின் போதும் சுரங்கத்தின் மீளமைப்பு வேலைகள் ஆரம்பிப்பதற்குரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு எதிர்கால நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முடியதிருந்தமை செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டிய அவசியமான நடவடிக்கைகள் திசை திருப்பப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளத்திட்ட செயற்திட்டத்துடன் உள்ளடங்கியுள்ள 01 ஆம் இலக்கத்தின் கீழ் ஆரம்பிப்பதற்கு முடியாமல் இந்த செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்ட தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் காட்சிப்படுத்தும் முறைமையொன்றைத் தயாரித்தல் (SCADA) மற்றும் மண்சரிவு மீளாய்வு மற்றும் முன் அனர்த்த மதிப்பீட்டு திட்டத்தைத் தயாரித்தல் போன்ற இரண்டு பணிகளுக்காக ரூபா 80 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் மேலதிக நிதியீட்ட செயற்திட்டத்தின் மூலமும் கைவிடப்பட்டிருந்தது.

**(இ) செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தாதிருந்தமை**

---

மீளாய்வாண்டில் 05 செயற்திட்டங்களுக்காக வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,046.95 நிதி ஏற்பாடுகளிலிருந்து எவ்வித பயன்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.9 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் (நோக்கங்களுக்கு புறம்பானவைகள்)

அமைச்சு தனது நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளுக்குப் புறம்பாக செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான கால எல்லைக்காக காலநிலை மாற்றங்கள் தொடர்பான கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்க மற்றும் தனியார் பிரிவின் மூலம் பயன்படுத்த வேண்டிய தொழில்நுட்ப நுழைவுகளைத் தயாரிக்கும் நோக்கில் ஓசோன் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஓசோன் செயற்திட்டத்தின் மூலம் நிலமீட்பு நிலையத்தை (Reclamation Centres) ஏற்படுத்துவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 இடங்களின் மாத்திரம் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் போது திட்டத்திற்கு முரணாக பொலன்னறுவையில் தொழில்நுட்பக் கல்லூரியொன்று தாபிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) ஓசோன் செயற்திட்டத்தில் ஐக்கிய நாடுகளின் வருடாந்த வேலைத் திட்டத்தில் செலவின விடய வகைப்படுத்தல் இலக்கம் 721600 இன் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவையினை வழங்குகின்ற நிறுவனமாக 15 துறைகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 03 துறைகளை மாத்திரம் உள்ளடக்கும் வகையில் செயலமர்வுகள் மற்றும் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

(ii) 1998 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட பவித்ரகங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அவிசாவளை முதல் மோதரை வரையான களனி கங்கை பிரதேசத்தில் மாசடைதலைக் குறைத்து நீரின் தன்மையை சாதகமான நிலையில் பேணுதல் நோக்கமாக இருந்தது. இதற்கான கொள்கை மற்றும் தந்திரோபாய வழிகள் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2016 ஆம் ஆண்டிற்காக பவித்ரா கங்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு செயற்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு 13 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து மாத்திரம் பதிலளிக்கப்பட்டிருந்தது.

(iv) திறசற கிராம நிகழ்ச்சித்திட்டம் 2015 இன் கீழ் 07 திறசற கிராமங்களை நிர்மாணிப்பதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 02 கிராமங்களில் மாத்திரம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பின்வரும் சந்தர்ப்பங்களின் போது நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) தேசிய மரக் கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நாட்டில் உயிரியல் பல்வகைமையை பரவச் செய்யும் செயற்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த தரவு சேகரித்தல் நடவடிக்கைகள் மற்றும் இணையதளத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய பணிகள் என்பன நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மொன்றியல் கட்டமைப்பை அமுல்படுத்தும் (ஓசோன் செயற்திட்டம்) செயற்திட்டத்தின் வருடாந்த வேலைத் திட்டத்தின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவை, தனியார் பதவியணியினர் கொடுப்பனவுகள் மற்றும் உள்நாட்டு ஆலோசனைச் சேவைகள் என இரண்டு கணக்குகள் ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் செயற்திட்ட பொறுப்பு பணிப்பாளருக்கும் கணக்காளருக்கும் 2015 ஒக்தோபர் மாதம் வரை படியாக ரூபா 419,985 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அக் கொடுப்பனவுகள் உள்நாட்டு மதியுரைச் சேவையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்று 9,626 கிலோ மீற்றர் ஓடியிருந்ததுடன் அதற்கான நாளாந்த ஓட்ட அட்டவணை பதிவேட்டின் பிரகாரம் எரிபொருள் விநியோகிக்கப்படாமல் 8,327 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(iii) பதவி மாற்றப்பட்டதன் பின்னரும், பொறியியல் பணியகத்தின் உத்தியோகத்தர்களின் செயற்திறனை மேலோங்கச் செய்வதற்காக செலுத்தப்படுகின்ற ஊக்குவிப்புப் படிகள் உத்தியோகத்தரொருவருக்கு 07 மாதங்களுக்கு ரூபா 424,576 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பதவிக்கு உரித்தான சம்பள படிநிலையில் வைக்காமல் உத்தியோகத்தரொருவருக்கு 07 மாதங்களுக்கு ரூபா 688,877 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் போட்டியாளர் கூறுவிலைகள் கோரப்படாமல் பசுமை லங்கா நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சுத்தமான வாயு நிலையை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நாளதுவரையாக்குவதற்காக மூன்று நாள் செயலமர்வுகளை நடாத்துவதற்கு ரூபா 795,594 தொகை செலவில் தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட செயலமர்வினை நடாத்தும் போது மதிப்பீடு ரூபா 980,000 ஆக இருந்த போதிலும், அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14 வழிகாட்டியின் பிரகாரம் அதிகாரசபை எல்லைகளின் கீழ் கொள்வனவுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படத்தப்பட்ட சிக்கனமற்றதாக மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சிற்குச் சொந்தமாக போதியவான வாகனங்கள் இருக்கும் போது சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக மூன்று வருட திட்டத்தை அமுல்படுத்தும் செயலமர்வில் பங்குபற்றுவதற்காக அதிசொகுசு பேரூந்து வண்டியொன்று ரூபா 40,100 வாடகை செலுத்தி பெறப்பட்டிருந்தது.

(ஆ) பசுமை லங்கா நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தூய்மையான காற்று நிலைமை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளதுவரையாக்குவதற்காக மூன்று நாள் செயலமர்விற்காக தங்குமிடம், உணவு மற்றும் விரிவுரை மண்டபக் கட்டணம் என்பவற்றிற்காக ரூபா 72,450 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அமைச்சிற்குச் சொந்தமாக போதியளவான வாகனங்கள் இருக்கும் போது ஓசோன் தினம் அமைச்சின் உத்தியோகத்தர்களின் போக்குவரத்திற்காக ரூபா 4,020 தொகை செலுத்தி வாடகை அடிப்படையில் வாகனமொன்று பெறப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஏப்ரல் 20 ஆந் திகதி முதல் 24 ஆந் திகதி வரை ஓசோன் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய 02 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், இதற்காக இலங்கை அரசின் ஒரு பிரதி நிதியொருவருக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் செலவிடப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருக்கும் போது இலங்கைக் குடியரசை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆகக் குறைந்த பங்குபற்றலை விஞ்சி மேலதிக உத்தியோகத்தரொருவர் பங்குபற்றச் செய்யப்பட்டமையினால் அமைய மற்றும் இணைந்த படிகளாக ரூபா 961,891 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்று ரூபா 421,139 தொகை செலுத்தி பழுதுபார்க்கப்பட்டு 06 மாதங்கள் கழிவதற்கு முன்னர் மீண்டும் ரூபா 230,819 தொகையில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. இரண்டாவது தடவை பழுதுபார்ப்பதற்காக வாகனம் 01 வருடம் 08 மாத காலம் கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதற்காக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது தடவை

பழுதுபார்த்தலின் பின்னர் வாகனம் ஓட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அமைச்சினால் செலவிடப்பட்ட ரூபா 651,958 தொகை செலவினம் பயனற்றதாக இருந்தது.

### 3.13 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக அமைச்சினால் சரிசெய்யப்படாதிருந்த பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 3.5 | அலுவலக உபகரணங்கள் மற்றும் 71 ஏனைய விடயங்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன. |
| 2014 | 3.9 | 2010 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 588,278 தொகை நட்டம் மற்றும் 02 நட்ட இழப்புக்கள் காணப்பட்டது. |
| 2014 | 3.11 | 112 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.14 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 54 | 24 | 30 |
| (ii) | மூன்றாம் நிலை | 34 | 34 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 173 | 113 | 60 |
| (iv) | ஆரம்ப நிலை | 76 | 54 | 22 |
| (v) | ஏனைய (ஒப்பந்த/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | மொத்தம் | 338 | 226 | 112 |